09.07.2025

அ.வ.எண். 338/2017

வா.சா.1 - சித்ரா க/பெ. கணேசன்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 09.07.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 5 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதப்படிக்க தெரியும் என்றால் ஓரளவு தெரியும். வழக்குரையை ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளனர் அதை படித்து காட்டினார்களா என்றால் என் மகனுக்கு படித்து காட்டினார்கள். இடப்பிரச்சினைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய இடம் பத்திரத்தில் உள்ளது. என்னுடைய இடம் என்பதற்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், வேறு பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாத்தா இடம். வழக்குரையில் எனது இடத்திற்குள் பிரதிவாதிகள் அத்து மீறி நுழைந்து கட்டிடம் கட்ட கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான்.

2. பிரமாண வாக்குமூலுத்தை நான் படித்துதான் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை என் தாயாருக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலம் என் தாயாருக்கு சேர்த்து தாக்கல் செய்ய அனுமதி பெற்றுள்ளேனா என்றால் ஆமாம். நான் 2012 ல் வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்து எனக்கும் என் தாயாருக்கும் சொந்தமானது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா பெயரில் உள்ள ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கு என் பெயரிலோ என் தாயார் பெயரிலோ வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கு என் தாத்தா பெயரில் வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வடகோட்டில் மேற்கு திசையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்பதை நிரூபிக்க ஏதாவது புகைப்படமோ,

வரைபடமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த காலத்தில் அந்த ஆவணங்கள் இல்லை. என் தாயார் எனக்கு ஆதரவாக தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் ஆமாம். தானசெட்டில்மெண்ட் தேதி ஞாபகம் இல்லை. தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என் தாயார் எனக்கு எழுதிவைத்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். வழக்குரையில் தானசெட்டில்மெண்ட் பற்றி எந்த பாராவில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது வேறு பத்திரம். வழக்கு சொத்து எந்த க.ச .எண்ணில் உள்ளது என சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்து சரவே எண்.368/3 ல் உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பத்திரம், தாய் பத்திரம் உள்ளது. நான் சொன்னவாறு பத்திரம் மற்றும் தாய் பத்திரத்தில் நான் சொன்ன சர்வே எண் இல்லை என்றால் சரியல்ல சர்வே எண் உள்ளது. வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை தாலூக்கா சர்வேயர் உதவியுடன் அளக்க வேண்டும் என மனு தாக்கல் செய்திருந்தேன். நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார். நீதிமன்ற ஆணையர் கடந்த 09.12.2017 ம் தேதி வழக்கு சொத்தை பார்வையிட வந்தார் என்றால் தேதி தெரியாது. சொத்தை அளந்தாரா என்றால் சொத்தை அளக்க விடவில்லை.

5. நீதிமன்ற ஆணையர் இந்நீதிமன்றத்தில் ஒரு இடைக்கால அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் அவரது இடைக்கால அறிக்கையில் சர்வேணர் அறிக்கையில் பெயரில் வழக்கு சொத் சர்வேஎண்,.368/1 ல் இடம் இல்லை என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து சர்வே எண்.368/1 ல் இல்லை என தெரிந்த பிறகு வழக்கு சர்வே எண்ணை திருத்த நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஆமாம். நான் வழக்குரையில் சர்வே எண்ணை திருத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சர்வே எண்ணை திருத்தி நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை பார்வையிட மனு

தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. வழக்கு சொத்து உண்மையில் என் தாத்தா கந்தசாமி பண்டாரத்திற்கு பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து உண்மையில் என் தாத்தா கந்தசாமி பண்டாரத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். கந்தசாமி பண்டாரத்தின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கந்தசாமி பண்டாரம், அவரது மகன் பேச்சிமுத்து பண்டாரம் கடந்த 1940 ம் ஆண்டு வழக்கு சொத்தை 3 ம் நபருக்கு விற்றுவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் விற்கவில்லை. விற்பனை ஆவண எண்.101/1940 என்றால் விற்கவில்லை.

7. கந்தசாமி பண்டாரம் மற்றும் பேச்சுமுத்து பண்டாரம் ஆகியோர் பச்சையம்மாளுக்கு விற்பனை செய்த சொத்தினை பச்சையம்மாள் கடந்த 19.06.1943 ம் தேதி சுப்பம்மாள் என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் இல்லை. பச்சையம்மாளும், சுப்பம்மாளும் ஏற்கனவே சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் அது வேறு சொத்து. பச்சையம்மாள் கடந்த 02.02.1974 ம் தேதி சின்னசாமி கவுண்டருக்கு சொத்தை விற்ற விவரம் தெரியுமா என்றால் விற்கவில்லை. சின்னசாமி கவுண்டருக்கு வாடகைக்கு தான் கொடுத்திருந்தனர்.

8. திருப்பூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.864/1974 என்ற வழக்கை பேச்சியம்மாளும், தாத்தா கந்தசாமி, பேச்சிமுத்து ஆகியோர் சின்னசாமிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அதில் சின்னசாமிக்கு ஆதரவாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது. உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதில் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மெட்ராஸ் உயர்நீதிமன்ற தீர்ப்பை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

9. வழக்கு சொத்தில் சின்னசாமிதான் குடியிருக்கிறார் என்றும், இது நாள் வரை எங்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் வழக்கு சொத்தில் குடியிருப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பத்திரம் உள்ளது. பத்திரம் தாக்கல் செய்யவில்லை. தாத்தா கந்தசாமி பண்டாரம், தகப்பனார் பேச்சிமுத்து பண்டாரம், 3ம் நபர்களான பச்சையம்மாள், சுப்பம்மாள் மற்றும் சின்னசாமி வழக்கு சொத்தை விற்ற காரத்தினால் அந்த விவரங்கள் வழக்கு சொத்தில் வில்லங்க சான்றிதழில் பிரதிபலிக்கும் என்ற காரணத்தினால் இந்த வழக்கின் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொத்தை விற்கவில்லை.

10. என் தாயார் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எந்த பத்திரம் மூலப்பத்திரமாக காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. என் தாயார் மேற்கூறிய தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் நான்இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பத்திரத்தினை பற்றி கூறவில்லை என்றும் வருவாய் ஆவணங்களான பட்டா எண்கள்.490, 492 அடிப்படையாக கொண்டு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் வழக்கு நடப்பதால் பத்திரம் பற்றி சொல்லவில்லை. மேற்படி விவரங்களை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு நடக்கிறது என்ற விவரத்தை தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு நடப்பதால் சொல்லக்கூடாது. வழக்கு முடிந்ததும் சொல்லிக்கொள்ளலாம் என சொன்னார்கள். யார் சொன்னார் என குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் எனக்கே தெரியும்.

11. பட்டா எண்கள்.490, 492 ல் உள்ள அளவுகள் வழக்கு சொத்தில் கூறியுள்ள அளவுகளோடு குறைவாக வருவாய் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள காரணத்தினால் அதைப் பற்றி இந்த வழக்கில் கூறவில்லை என்றால் அளவுகள் சரியாக உள்ளது. பத்திரம் வைத்து அளந்தால் தான் தெரியும். வழக்குரையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அதற்காக புகார் மனு ரசீது கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும் மேற்படி புகார் மனு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். புகார் மனு நகலை தாக்கல் செய்யவில்லை என்றும் புகார் மனு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. என் தாயார் செட்டில்மெண்ட் எழுதிவைத்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாருடன் செட்டில்மெண்ட் ஆவணத்தை சேர்த்து கொடுத்தேனா என்றால் இல்லை. புகாருடன் பாகப்பத்திரம், வில்லங்க சான்றிதழ் சேர்த்து புகார் கொடுத்தேன். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்த போலீசார் புகார் பொய்யானது என தள்ளுபடி செய்தனர் என்றால் சரியல்ல நீதிமன்றத்தை அனுகுமாறு சொன்னார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்காக இறுதி அறிக்கை கொடுத்தார்களா என்றும் அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

13. புகார் மீது நடவடிக்கை எடுப்பது சம்மந்தமாக மேல் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு மேற்கு தேர் தடம் உள்ளது. கிழக்கு பள்ளிகூடம் உள்ளது. தெற்கு கிணர் இருந்தது தற்போது அதை மூடிவிட்டனர். வடக்கே நான் குடியிருக்கிறேன். மேற்படி நான்கெல்லைகளை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வேண்டுகோளின் படி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

sd/- M.Santhosham
District Munsif, Sulur